# NEWSPAPER CLIPPINGS

| | | | |
|---|---|---|---|
| MEDIA | NAM NAADU | DATE | 27 OCT 2013 (SUN) |
| PAGE / SECTION | 1 & 12 / LOCAL NEWS | READERSHIP | 45,000 |

## முதல்முறையாக தமிழ்ப்பள்ளியில்

# மருத்துவ மையம்!









அர்ச்சனா வாசுதேவன், யோகி

பெட்டாலிங் ஜெயா: பெட்டாலிங் ஜெயா ரோட்டரிக் கழகம் (Petaling Jaya Rotary Club) ஆதரவில் பெட்டாலிங் ஜெயா விவேகானந்தா தமிழ்ப்பள்ளியில் பயிலும் 100 ஏழ்மை நிலை மாணவர்களுடன் 'தீபாவளி நல்லெண்ண விருந்து' எனும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. பள்ளியில் பயிலும் மாணவர்களில் வசதி குறைந்த குடும்பங்களை அடையாளம் கண்டு, எழுது பொருள்கள், உணவு, தீபாவளி அன்பளிப்பு போன்றவற்றை வழங்கி மகிழ்ச்சிப்படுத்தியது.

இந்தத் தீபாவளிக் கொண்டாடத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அப்பள்ளியின் தலைமையாசிரியர் பாலமோகன், பேசுகையில், " இந்தப் பள்ளியில் மொத்தம் 64 ஆசிரியர்கள் உள்ளனர். அதில் 58 பேர் பெண் ஆசிரியைகள். குடும்பம் குழந்தை என்று இருக்கும் ஆசிரியர்களுக்கு உதவி செய்யும் வகையிலும், அவர்கள் நீண்ட நேரம் பள்ளியில் இருப்பதற்காகவும், அவர்களின் குழந்தைகளுக்கு பராமரிப்பு மையம் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று திட்டம் வைத்திருந்தோம். அதோடு, பள்ளி மாணவர்களுக்காக ஒரு சிறிய மருத்துவ மையம் ஒன்றும் அமைக்க வேண்டும் என்ற திட்டங்களை பெட்டாலிங் ஜெயா ரோட்டரிக் கழகத்திடம் சொன்னவுடன் செயற்குழுவுடன் பேச்சு வார்த்தை நடத்தி, எங்கள் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதாகக் கூறினர். இந்த வேளையில் அவர்களுக்கு நான் நன்றிக் கூற கடமைப் பட்டுள்ளேன்" என்று கூறினார்.

அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய பெட்டாலிங் ஜெயா ரோட்டரிக் கழகத்தின் தலைவர் சசிதரன், இந்தப் பள்ளி மாணவர்களுடன் தீபாவளிக் கொண்டாட்டத்தைப் பகிர்ந்துகொண்டதில் மகிழ்ச்சியாக உள்ளது என்று தெரிவித்தார். அதோடு ஒரு மருத்துவ மையமும், குழந்தைகள் பராமரிப்பு மையமும் இந்தப் பள்ளியில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான வேலைகள் அடுத்த வாரம் தொடங்கப்படும் என்று கூறிய சசிதரன், அதன் வேலைகள் அனைத்தும் 3 மாதங்களில் முடிவடைந்து, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் அவ்விரு மையங்களும் திறக்கப்படும் என்றும் தெரிவித்தார். அதன் கட்டுமானப்பணிகளுக்காக 75,000 வெள்ளி நிதி உதவியைச் சசிதரன், பள்ளித்தலைமையாசிரியரிடம் வழங்கினார். பள்ளிப் பிள்ளைகளின் நடனத்தோடு தொடங்கப்பட்ட இந்த நிகழ்வில் முக்கியப் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.



